சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்
முன்னிலை : திரு. M. சிவாஜி செல்லையா, L.L.M.,
சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.

2026 ம் வருடம் ஜுலை மாதம் 10–ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>அசல் வழக்கு எண். 394/2024</u>

<u>CNR No.TNTH050013722024</u>

உமா .... வாதி

/எதிர்/

சிவக்குமார் ... பிரதிவாதி

இவ்வழக்கு 23.06.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.தங்கதுரை அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவர்கள் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரைக்கு கேட்பு நல்கியும் முன்னிடப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>தீர்ப்புரை</u>

வாதிக்கு பிரதிவாதி பிராது தொகையான ரூ.6,05,750/–மும் அசல் தொகை ரூ.5,00,000/–க்கு பிராது தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரை மாதம் ஒன்றுக்கு 12% வட்டியும் செலுத்தக்கோரியும், இவ்வழக்கின் செலவுதொகையை வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>

வாதியிம், பிரதிவாதியும், பக்கத்து வீட்டில் வசித்து வருகின்றனர் என்ற பழக்கத்தின் அடிப்படையில், வாதியிடம், பிரதிவாதி அவரது விசாயத்திற்காக வேண்டி கடந்த 01.09.2023 ம் தேதியன்று கடனாக ரூ.5,00,000/– கடன் பெற்று கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக மாதம் 1க்கு ரூ.100/–க்கு, ரூ.1.50 வீதம் வட்டி சேர்த்து கூடிய வட்டியும் அசலும் வாதி வேண்டும் போது வாதியிடமாவது அல்லது வாதியின் உத்திரவு பெற்றவர்களிடமாவது ரொக்கம் செலுத்தி வைப்பதாக ஒப்புக்கொண்டு வாதிக்கு பிரதிவாதி, 5 புரோ நோட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பிரதிவாதி அதன் பின்னர் அசல் மற்றும் வட்டித்தொகையை செலுத்தக்கோரி வாதி நேரில் சென்றும், ஆட்கள் மூலம் துயர்ந்தும், கேட்டதில் பிரதிவாதி யாதொரு தொகையையும் செலுத்தாமல் செலுத்தி

விடுவதாகவே கூறி வீண் காலம் கடத்தி வந்தார் என்றும், எனவே, வாதி பிரதிவாதிக்கு 08.10.2024ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றும், பிரதிவாதி அதை 14.10.2024ம் வாங்க மறுத்துவிட்டதால் unclaimed என்று குறிப்பிட்டு திருப்பப்பட்டது என்றும், எனவே, வாதியால் பிராதில் கண்ட தொகையை வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் திரும்பப்பெற வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) பிரதிவாதி தரப்பில் அவரை அழைத்தும் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக ஆக்கப்பட்டுள்ளார்.

4) <u>பிரச்சனை மற்றும் அதற்கான தீர்வு</u>

வாதி கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கக்கூடியதா?

5) வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்யக்கூடிய வகையில் வாதி உமா வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, 01.09.2023ம் தேதியில் வாதிக்கு பிரதிவாதி ரூ.5,00,000/- எழுதிகொடுத்துள்ள பிராமிசரி நோட்டு வா.சா.ஆ, 1 ஆகவும், 08.10.2024 ம் தேதிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், 14.10.2024ம் தேதிய தபால் உறைகள் வா.சா.ஆ.3 ஆகவும், 17.10.2024 அஞ்சலக ட்ராகிங் ரிப்போர்ட் வா.சா.ஆ.4 ஆகவும், ஆதார் அடையாள அட்டை வாசா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) மேலும், மேற்படி வா.சா.1 வாய்மொழி சாட்சியம் மற்றும் வாசாஆ 1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது பிரதிவாதி கடந்த 01.09.2023ம் தேதியில் அவரது அவசர நிமித்தம், குடும்ப செலவுக்காகவும், சில்லரைக் கடனைதீர்க்கவும் வாதியிடம் ரூ.5,00,000/-ஐ கடனாக ரொக்கம் பெற்றுக்கொண்டு வா.சா.ஆ.1 புரோநோட்டு எழுதிக்கொடுத்துள்ள விபரம் மேற்படி ஆவணத்தை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது.

7) ஆனால், வாதி தரப்பில் வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்து வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்துள்ள நிலையில், பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியின் வழக்கை (Rebuttal) மறுத்தளித்து வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெரிய வருகிறது.

8) எனவே, வாதி தரப்பு வா.சா.1 வாய்மொழி சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 வது ஆவண சாட்சியம் மூலம் பிரதிவாதி கடந்த 01.09.2023 ல் ரூ.5,00,000/- கடன் பெற்று

கொண்டு அதற்கு ஆதாரவாக வா.சா.ஆ. 1 புரோநோட்டு எழுதி கொடுத்துள்ளார் என்பது வாதி தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் அவர் கோரியுள்ள பரிகாரம் செலவுத்தொகையுடன் கிடைக்கத்தக்கது என இந்த பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

9) மேலும், வாதி பிராதில் ரூ.100–க்கு ரூ.1 வீதம் 18 சதவீத வருட வட்டி கோரியிருந்தாலும் வழக்கின் தன்மை மற்றும் பிரதிவாதியுடைய சமூக பொருளாதார சூழ்நிலை ஆகியவற்றை பரிசீலனை செய்யும்போது, வாதிக்கு 9 சதவீத வட்டி வழங்குவதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10) இறுதியாக, வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, பிரதிவாதி வாதிக்கு ரூ.6,05,750/–(Rounded off) மும் அசல் தொகை ரூ.5,00,000/–க்கு பிராது தேதி முதல் தீர்ப்பு தேதி வரை 9% வட்டியும், தீர்ப்புக்கு மறுநாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் தேதிவரை 6% பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 10.07.2026ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

<u>வாதி தரப்பு சாட்சி</u>

வா.சா.1 – உமா

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.09.2023 | வாதிக்கு பிரதிவாதி ரூ.5,00,000/– எழுதிகொடுத்துள்ள பிராமிசரி நோட்டு(5 எண்ணம்) | அசல் |
| வா.சா.ஆ.2 | 08.10.2024 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 14.10.2024 | தபால் உறைகள் (2) | அசல் மற்றும் கணினி ரசீது |
| வா.சா.ஆ.4 | 17.10.2024 | அஞ்சலக ட்ராகிங் ரிப்போர்ட்–2 | இணையவழி நகல் |
| வா.சா.ஆ.5 | –– | ஆதார் அடையாள அட்டை | நகல் |

பிரதிவாதி தரப்பு சாட்சி சான்றாவணங்கள்

– இல்லை –

sd/–M.சிவாஜி செல்லையா
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.

OS.394/2024
**சீரான** தீர்ப்புரை
நாள்:10.07.2026